அசல் வழக்கு எண். 58/2020 வா.சா.1 நீலகண்டன் த/பெ பூபதி

**20.09.2023 1 முதல் 3ம் பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் பள்ளிக்கே செல்லவில்லை. கையெழுத்து மட்டும் போடுவேன். 1ம் பிரதிவாதி என் அப்பா ஆவார். 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி என் அக்காக்கள் ஆவார்கள். 4ம் பிரதிவாதி என் தாய் மாமன் ஆவார். 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி 2ம் பிரதிவாதியின் கணவர் ஆவார்.

2. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் எனக்கு தெரியாது. 2 ஏக்கர் விஸ்தீரணம் உடையதாகும். வழக்கு சொத்துஎன் அப்பா சம்பாதித்த சொத்து என்றால் சரியல்ல . என் அப்பா, அக்காக்கள் அனைவரும் சேர்ந்த சம்பாதித்த சொத்தாகும். வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட கிரய பத்திரம் என் அப்பா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். குடும்பத்தில் மூத்தவர் என்பதால் என் அப்பா பெயரில் கிரயம் பெறப்பட்டது. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் எல்லோரும் சேர்ந்து கூட்டாக கிரயம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. வழக்கு சொத்து ஆதிமூலம் என்பவரிடம் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல் வழக்கு சொத்து கூட்டாக சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து அல்ல என்றும் என் அப்பா தனது பெயரில் வாங்கிய தனிப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல. அதனால் வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

4. வழக்கு சொத்து கிரயம் பெறுவதற்கு முன்பே ஆதிமூலம் பெயரில் அரசால் ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் கிணறு வெட்டப்பட்டது. ஆனால் ஆதிமூலம் பாதி கிணறு தான் வெட்டி இருந்தார். என் அப்பா கிரயம் வாங்கிய பிறகு மீதி கிணறு வெட்டி அமைக்கப்பட்டது. நான் சொல்வது பொய் என்றும் என் அப்பா கிரயம் வாங்குவதற்கு முன்பே ஆதிமூலம் கிணறு வெட்டி இருக்கிறார் என்றும் அந்த கிணற்றுக்கு மின் இணைப்புபெற்றிருந்தார் என்றும் என் அப்பா கிரயம் வாங்கும்போது கிணறு மற்றும் மின் இணைப்பு சேர்ந்து தான் கிரயம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றும் தெரிந்து கொண்டே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. என் அப்பா பெயரில் உள்ள பூர்வீக சொத்தை விற்றுதான் வழக்கு சொத்து என் அப்பா பெயரில் கிரயம் வாங்கப்பட்டதாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. என் அப்பா தனது பூர்வீக சொத்தை கவிதா என்பவருக்கு விற்றார் என்றால் சரிதான். என் தாத்தா பெயர் பொன்னுசாமி ஆகும். என் தாத்தாவிற்கு என் அப்பா பூபதி, ரிஷிகேஷன், மற்றும் தேவராஜ் ஆகியோர் பிள்ளைகள் ஆவார்கள் என்றால் சரிதான். என் தாத்தா இறந்தபிறகு அவரது பிள்ளைகள் மூவரும் தங்கள் பூர்வீக சொத்தினை பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் என் அப்பாவிற்கு பாகமாக வந்த சொத்தினை தான் என் அப்பா கவிதாவிற்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான்.

6. என் அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டபோது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். நான் பிறந்தபிறகு என் அப்பாவிற்கும் அவரது சகோதரர் களுக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பே என் அப்பாவும் அவரது சகோதரர்களும், பாகம் பிரித்துக் கொண்டதால் அது என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றும் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உரிமை உள்ளது.

7. வா.சா.ஆ.2 கிரயபத்திரத்தில் என்அப்பா மட்டும்தான் கவிதாவிற்கு கிரயம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நாங்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டாக கிரயம் கொடுத்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டாக கிரயம் கொடுத்தோம் என்பதற்காக எல்லோரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளோம். உண்மையிலேயே வழக்கு சொத்தில் எனக்கும் என் சகோதரிகளுக்கும் உரிமை இருந்திருந்தால் நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் கிரயம் கொடுத்திருப்போம் என்றும் அவ்வாறு செய்யாததால் வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8. எனக்கு 2007ம் ஆண்டில் திருமணம் நடந்தது. நான் என் ஊரை சேர்ந்த ராஜகுமாரி என்பவரை விரும்பி திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான். திருமணம் நானேதான் செய்துக் கொண்டேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்னரும் அதன்பிறகும் நான் எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டில்தான் இருந்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆடுகள் மேய்த்துக்கொண்டு விவசாயம் செய்து வந்தேன்.

9. என் அப்பா 3ம் பிரதிவாதியான என் அக்காவின் திருமணத்திற்காக 25 சவரன் நகைகள் செய்து வைத்திருந்தார் என்றும் ஆனால் அந்த நகைகளை நான் அவருக்கு தெரியாமல் எடுத்து சென்று திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய அந்த செய்கையினால் தான் 3ம் பிரதிவாதி இதுவரை திருமணம் செய்துக்கொள்ளாமல் வீட்டிலேயே உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதியும் என் அப்பாவும் தான் வரும் வரன்கள் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். நான் 1ம் பிரதிவாதியின் மகன் என்பதால் தான் அவர் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றுசொன்னால் சரியல்ல. அதேபோல் என் அப்பா ஆடு மாடுகள் வைத்திருந்தார் என்றும் திருமணத்திற்கு முன்பு அந்த ஆடு மாடுகளை நான் அவருக்கு தெரியாமல் விற்றுவிட்டேன் என்றும் அதனால் இன்று வரை நஷ்டத்தை பார்த்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

10.வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும் அதனால் தான் 4ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி அந்த சொத்தை கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. என் அப்பா 4ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த விவரம் எனக்கு அப்போதே தெரிந்தது என்றால் சரியல்ல. 2019ம் ஆண்டில் நான் வீடு கட்டும் சமயத்தில் தான் அந்த கிரயம்பற்றி எனக்கு தெரிய வந்தது. எனக்கு கிரயம் கொடுத்தவிவரம் முன்னரே தெரியும் என்றும் ஆனால் என் அப்பா அம்மா மற்றும் என் அக்காக்களை ஏமாற்ற வேண்டுமென்பதற்காக வழக்கிற்காக 2019ம் ஆண்டில்தான் கியரம் பற்றி தெரியவந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல.

11. எனக்கு திருமணம் ஆகி 13 ஆண்டுகள் கழித்து தான் நான் சொந்த ஊருக்கு வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது தனிப்பட்ட பெயரில் ஆகாரம் கிராமத்தில் சொத்து வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். 2019ம் ஆண்டில் நான் கிரயம் வாங்கினேன். அவ்வாறு நான் கிரயம் வாங்கிய சொத்து என் அப்பாவிற்கு தெரியாமல் நான் எடுத்து சென்ற 25 சவரன் நகைகளை விற்று தான் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு நானும் என் அப்பாவும் தனித்தனியாகதான் இருந்து வருகிறோம் பேச்சுவார்த்தை இல்லை. வழக்கு சொத்து என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றும் அந்த சொத்தை என் தாய்மாமாவிற்கு விற்று விட்டதால் அந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றும் வழக்கிற்காக படிக்க தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.